# அரசாங்க அறிவித்தல்கள்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதற்கான அட்டவணையில் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்டங்கள் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2019 மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற ஒரு வருட காலப்பகுதிக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2018.11.23 ஆந் திகதிய 2098/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச்.எஸ். தலைப்பு இல.0713.10.10 மற்றும் 0713.10.20 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பட்டாணிக்கடலைகள்(வட்டானா) சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவு 2019 மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மங்கள சமரவீர
நிதி அமைச்சர்

நிதி அமைச்சு
கொழும்பு 01
2019 மே மாதம் 20 ஆந் திகதி

## அட்டவணை

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| 01. | 07.03 | 0703.10.10 | சிறிய வெங்காயம் | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| 02. | 07.13 | 0703.10.20 | பட்டாணிக்கடலைகள் (பைசம் சற்றைவம்)- முழுமையானவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 5.00 |
| | | 0713.10.20 | பட்டாணிக்கடலைகள் (பைசம் சற்றைவம்)- பிளக்கப்பட்டவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 8.00 |
| 03. | 08.04 | 0804.10.10 | பேரீச்சம்பழம்- புதியவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| | | 0804.10.20 | பேரீச்சம்பழம்- உலர்த்தியவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| 04. | 08.06 | 0806.20 | திராட்சை- உலர்த்தியவை | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 230.00 |
| 05. | 09.09 | 0909.31 | சீரக விதைகள்- பொடியாக்கப்படாத மற்றும் அரைக்கப்படாத | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| | | 0909.32 | சீரக விதைகள்- பொடியாக்கப்பட்ட மற்றும் அரைக்கப்பட்ட | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| 06. | | 0909.61.20 | பெருஞ்சீரக விதைகள்- | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 162.00 |
| 07. | 15.17 | 1517.10.30 | மாஜரின்- பிற கொழுப்புக்கள் 80% வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 215.00 |
| | | 1517.10.90 | பிற | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 315.00 |